திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, உயர் தொடக்கப்பள்ளிகளிலே 6, 7, 8-வது வகுப்புகளிலே தமிழாசிரியர்களை நியமிக்க வேண்டிய அவசியமிருந்தால், அனுமதி பெற்று நியமிக்கலாம் என்று இருந்தாலும், நான்கு பிரிவுகள் இருந்தும்கூட அண்மையிலே அப்படிப்பட்ட அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆகவே இந்த உத்தரவு திருத்தியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) : தலைவரவர்களே, இது பற்றித் தனியாக ஆராயலாம்.

Teaching Grant.

* 294. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government sanctions teaching grant to Colleges which prepare students for oriental title in Tamil;

(*b*) Whether there is any College in Salem District which has not been sanctioned the same; and

(*c*) if so, the reasons therefor?

கல்வி மானியம்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழில் வித்துவான் பட்டம் பெற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரிகளுக்கு அரசு கல்வி மானியம் வழங்குகிறதென்பது உண்மையா ?

(இ) சேலம் மாவட்டத்தில் அத்தகைய மானியம் வழங்கப்படாத கல்லூரி ஏதேனுமுள்ளதா ?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம். சுப்பிரமணியம் தமிழ்க் கல்லூரிக்கு (மோஹனூர்) அரசு மான்யம் வழங்கப்படவில்லை.

(உ) பல்கலைக் கழகம் இணைப்புக்காக விதித்துள்ள நிபந்தனைகளை இக்கல்லூரி நிறைவேற்றாததால் அரசு மான்யம் வழங்கப்படவில்லை.

1974 ஏப்ரல் 10]

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1968 ஆம் ஆண்டிலே பல்கலைக் கழகத்தின் அனுமதியோடுதான் இந்தப் பள்ளி துவங்கப்பட்டது. அப்படி அனுமதியோடு துவங்கப்பட்டிருப்பதால், இப்போது அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1968-ல் சில நிபந்தனைகளை விதித்துத்தான் பல்கலைக்கழகம் அனுமதியளித்தது. அந்த நிபந்தனைகளை இந்தக் கல்லூரி நிறைவேற்றாத காரணத்தினால், பல்கலைக் கழகம் அந்த அனுமதியினைத் திரும்பப் பெற்று விட்டது. பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் திரும்பக் கிடைத்துவிட்டால், அரசாங்கத்திற்கு அதை மீண்டும் உதவி பெறும் கல்வி நிலையமாகச் சேர்த்துக்கொள்ளுவதில் கடினமேதுமிராது. அதைத்தான் அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, மாணவர்களுக்குக் கிடைக்கும் ஸ்காலர்ஷிப் ஏதும் நிறுத்தப்படவில்லை. ஆனால் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் படும் ஊதியத்தைத்தான் நிறுத்திவைத்திருக்கின்றார்கள். எனவே இதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகம் அங்கீகரிக்காத நிலைமையில் அரசாங்கம் அங்கீகரிப்பது பொருந்தாத ஒன்று. சில நிபந்தனைகளின் பேரிலே பல்கலைக் கழகம் அவர்களுக்கு அனுமதி யளித்தார்கள். அந்த விதிகளை, நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றாத நிலையில், அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுவிட்டார்கள். இப்போது பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் கிடைத்தால், அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால், இந்த இடுக்கண் களையப்படும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, திரு கணபதி அவர்கள் கேட்டதையே திரும்பவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கல்லூரியில் சேரும்போது நம்பிக்கை யுடன் மாணவர்கள் அதில் சேர்ந்து பயிலுகின்றார்கள். அரசினர் அளிக்கும் பிற்பட்டோர் மானியம் போன்ற உதவிகளையும் அந்த மாணவர்கள் பெறு கின்றார்கள். இப்படி அரசின் ஒரு துறை அதை அங்கீகாரம் செய்து மானியத்தைக் கொடுக்கின்றது. ஆனால் பிறிதோர் துறையினர் அங்கீகாரம் இல்லையென்ற காரணத்தின் அடிப்படையில் சிலவற்றை நிறுத்திவிடுகின்றார்கள். இந்த இடர்பாடான நிலையை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாணவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைத் தனியாகக் கவனிக்கலாம். ஆனால் இனி மாணவர்கள் சேரக்கூடாது, சேர்ந்தால் இப்படித்தான் ஏற்படும் என்று அவர்களுக்கு வேண்டுமானால், தனியாக எச்சரிக்கலாம். ஆனால் இப்போதுள்ள நிலையில், இப்போது அங்கே பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் சங்கடங்களை நீக்குவதற்கு அவர்கள் விண்ணப்பம் அனுப்பினால், அதுபற்றித் தனியாகக் கவனிக்கலாம்.

Headmasters.

*295 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of posts allotted for the appointment of B.A., B.T., qualified Headmasters in the Elementary and Higher Elementary Schools under the Central Government Grant Scheme during the last academic year; and

(*b*) the number of posts filled up so far?

தலைமை ஆசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசு மானியத்தின் கீழ், தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில், பி.ஏ., பி.டி., கல்வித் தகுதியுடைய தலைமையாசிரியர்களை நியமிக்க, சென்ற கல்வி ஆண்டில் ஒதுக்கப்பட்ட இடங்கள் எத்தனை?

(இ) அவற்றில் எத்தனை இடங்கள் பயன்படுத்தப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தொடக்கக் கல்வியை விரிவாக்குவதற்கும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் ஆனமைய அரசுத் திட்டத்தின் கீழ் 1972-73-ல் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு பி.டி. தலைமை ஆசிரியர் நியமிக்க 877 பி.டி. ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

(இ) அப்பதவிகள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS